செய்தி வெளியீடு எண்: 95/2017 நாள்: 14.2.2017

**வேலூர் மாநகராட்சி பகுதிகளில் குப்பைகளை உடனுக்குடன் அகற்றிட ஓர் புதிய முயற்சி! ஸ்வச் பாரத் செயலி மூலம் புகார்களை தெரிவித்து குப்பைகளை உடனுக்குடன் அகற்றும் திட்டம்!!**

**மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.சி.அ.ராமன், இ.ஆ.ப., அவர்கள் ஸ்வச் பாரத் (Swachh Bharath App) செயலியை கல்லூரி மாணவ மாணவிகளிடையே துவக்கி வைத்து பேச்சு!!!**

தந்தை பெரியார் அரசு பொறியியல் கல்லூரி நாட்டு நலப்பனி திட்டம் (NSS) மற்றும் வேலூர் மாநகராட்சி இணைந்து ஸ்வச் பாரத் (Swach Bharath), ஸ்வச்சத் ஆப் (Swachhath App) மற்றும் ஸ்வக் சர்வேக்சன் – 2017 (Swach Survekshan – 2017) விழிப்புணர்வு நிகழ்ச்சி 15.02.2017 காலை 10.30 மணிக்கு கல்லூரி வளாகத்தில் மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.சி.அ.ராமன், இ.ஆ.ப., அவர்கள் குத்துவிளக்கேற்றி துவங்கி வைத்து பேசியதாவது:-

இந்த விழிப்புணர்வு நிகழ்ச்சியின் நோக்கம் தூய்மை இந்தியாவை உருவாக்க இளைஞர்கள் டிஜிட்டல் தொழில்நுட்பத்தை பயன்படுத்துவதும், மென்பொருளின் பயன்பாட்டை பொதுமக்களுக்கு சென்றடைய ஏதுவாக நடத்தப்பட்டது. இந்தியாவில் ஒரு இலட்சம் மக்கள் தொகைக்கு மேல் உள்ள 500 நகரங்கள் இத்திட்டத்தின் கீழ் வருகின்றன.

நம்முடைய தேசப்பிதா மகாத்மா காந்தியடிகள் தமது கழிப்பறையை தாமே சுத்தம் செய்வதை வழக்கமாக கொண்டவர். அதே போல அவர் இருந்த சபர்மதி ஆசிரமத்தில் உடனிருந்த தொண்டர்கள் அனைவரும் தங்களுடைய கழிப்பறையை தாமே சுத்தம் செய்ய வேண்டும். சீன நாட்டில் பண்டைய காலங்களில் குடியிருக்கும் பகுதிகளை சுற்றியுள்ள திறந்தவெளியில் மலம் கழிப்பதும், அப்பகுதி அசுத்தம் ஆன பின்பு அவ்விடங்களை விட்டு விட்டு வேறு குடியிருப்பு பகுதிகளுக்கு குடிபெயர்வதும் வழக்கமான ஒன்றாக நடந்து வந்தது. பின்னர் அந்நாட்டு அரசின் முயற்சியால் தனி நபர் கழிப்பறை உபயோகப்படுத்த சிறப்பு முகாம்கள் நடத்தப்பட்டு மக்களிடம் சுத்தம் பற்றிய விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டது.

நமது இந்திய அரசு தனி நபர் கழிப்பறை கட்டிடம் கட்டிட நகர்புறங்களில் உள்ளவர்களுக்கு 8000 ருபாயும், கிராமப்புறங்களில் உள்ளவர்களுக்கு 12000 ருபாயும் வழங்கி வருகிறது. இதன் அடுத்த கட்ட நடவடிக்கையாக ஸ்வச் பாரத் (**Swach Bharath App**) என்கிற செயலியை அறிமுகப்படுத்தியுள்ளது. இந்த ஸ்வச் பாரத் என்கிற செயலியை தங்களுடைய ஆண்ட்ராய்டு செல்போனில் பதிவிறக்கம் செய்து தெருக்களில் சேர்ந்துள்ள குப்பைகளை படம் பிடித்து உங்களுடைய புகார்களை மாநகராட்சிக்கு தெரிவிக்கலாம். நகரங்களின் அடிப்படை வசதிகள், கழிவுகள் அகற்றுவதும், நகராட்சி மற்றும் மாநகராட்சியின் செயல்திறன் போன்றவற்றை கருத்தில் கொண்டு தூய்மையான நகரத்தை கண்டறியவும், நம் நகரத்தின் தூய்மை தொடர்பாக பணிகளை மேற்கொள்ள அலுவலர்களை சந்திக்க நேரில் செல்ல தேவையில்லை. நம்மிடமுள்ள கைபேசி மூலமாகவோ மின்னஞ்சல் வாயிலாகவோ நம் புகார்களை தெரிவிக்கலாம். அப்புகாருக்கு 24 மணிநேரம் மற்றும் 48 மணி நேரத்தில் நம்முடைய புகாருக்கு ஏற்ற அளவில் பிரச்சனைகளை தீர்க்க இயலும். இப்புகாரின் நிலைப்பாட்டையும் நமக்கு குறுஞ்செய்தியின் வாயிலாக தெரிவிக்கப்படும். இதனால் தூய்மை பணி வேகமாகவும் துரிதமாகவும் நடைபெறும்.

பல்வேறு நாட்டு நிகழ்வுகளில் தற்போது இளைஞர்களின் பங்களிப்பு அதிகரித்து வருவதை போல இந்த தூய்மை இந்தியா திட்டத்திற்கும் இளைஞர்களின் ஒத்துழைப்பு அவசியமான ஒன்றாகும். நாம் தூய்மை இந்தியாவை உருவாக்க, டிஜிட்டல் இந்தியா திட்டம் ஒரு வரப்பிரசாதமாக விளங்குகிறது. தூய்மை இந்தியா திட்டத்தின் இன்னொரு முயற்சியாக இலவச மிஸ்ட் கால் வசதியும் ஏற்படுத்தப்பட்டுள்ளது. 1969 என்கிற டோல் எண்ணில் தொடர்பு கொண்டு மிஸ்ட் கால் செய்துவிட்டால் அவர்களே உங்களை தொடர்பு கொண்டு தங்களுடைய சந்தேகங்களையும், தங்கள் பகுதியில் திட்டத்தின் முன்னேற்றத்தினையும் தெரிந்து கொள்ளலாம். இந்த செயலியினை பயன்படுத்தி வேலூர் மாநகராட்சி மக்கள் பயனடைந்து வேலூர் மாவட்டத்தை சுத்தமும் சுகாதாரமும் நிறைந்த மாவட்டமாக அமைத்திட வேண்டுமென்று என்று மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.சி.அ.ராமன், இ.ஆ.ப., அவர்கள் கேட்டுக்கொண்டார்.

இதனை தொடர்ந்து (Mass Cleaning Activity) தூய்மை இந்தியா திட்டத்தை சித்தேரி சாலையில் மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.சி.அ.ராமன், இ.ஆ.ப., அவர்கள் துவங்கி வைத்தார். இந்த விழிப்புணர்வு நிகழ்ச்சியில் 500-க்கும் மேற்பட்ட மாணவ மாணவியர்கள் பங்கு பெற்றனர்.

இந்நிகழ்ச்சியில் மாநகர பொறியாளர் திரு.பாலசுப்பிரமணியம், மாநகர மருத்துவ அலுவலர் மரு.மணிவண்ணன், நாட்டு நலப்பணி திட்ட அலுவலர் மரு.என்.கலைவாசன், நகர தூய்மை அலுவலர் திரு.முருகன், திரு.ரேக்ஸ்மார்டின் சகாயராஜ், தந்தை பெரியார் அரசு பொறியில் கல்லூரி முதல் திரு.அருளரசு, துணை முதல்வர் திரு.ஸ்ரீராம்பாபு, பேராசிரியர்கள் மற்றும் மாணவ மாணவிகள் கலந்து கொண்டனர்.

வெளியீடு:

15/2/17

செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்,
வேலூர்-9.